# அர்ச். சின்னப்பரும் குருத்துவமும்

**சங். கே. அந்தோணி சுவாமி.**

**(தூத்துக்குடி மேற்றிராசனம்)**

குருத்துவத்துக்குத் தேவையான அம்சங்கள் இரண்டு : மனிதனுடைய பலவீனத்தை உணர்ந்திருப்பதும், தேவ அழைத்தலுமாம். இவையிரண்டும் கிறீஸ்துவில் அமைந்திருக்கின்றன. அவர் தேவ குமாரனும், மெல்கிசேதக்கின் முறைப்படி குருவுமானவர். மெல்கிசேதக்கின் குருத்துவம் ஆரோனுடையதைவிட உயர்ந்தது. மோயீசனுடைய பிரமாணமும் குருத்துவமும் கிறீஸ்துநாதருக்கு இடம் கொடுத்தன.

“எந்தக் குரப்பிரசாதியும் மனிதர்களுக்குள்ளே தெரிந்துகொள்ளப்பட்டு, காணிக்கைகளையும், பாவங்களுக்காகப் பலிகளையும் செலுத்தும்படிக்குத் தேவாராதனைக்கடுத்த காரியங்களில் மனிதர்களுக்குச் சனுவாக ஏற்படுத்தப்படுகிறான்.

ஏனெனில் அவன் தானும் பலவீனஞ் சூழ்ந்தவனாயிருக்கிறபடியினாலே, அறிவீனரோடும் நெறி தவறுகிறவர்களோடும் துயரப்படுகிறவனுமாயிருக்க வேண்டும்.” (எபி.5:3)

“அதனிமித்தம் அவன் ஜனங்களுக்காகப் பாவப் பரிகாரப் பலி ஒப்புக்கொடுக்க வேண்டியதுபோல தனக்காகவும் ஒப்புக்கொடுக்கவேண்டியது.” (எபி.5:4)

“அன்றியும் ஆரோனைப்போல சர்வேசுரனாலே அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த மகிமைக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை.” (எபி.5:4)

மேலே தரப்பட்ட வசனங்கள் எபிரேயர் மத்தியிலிருந்த குருத்துவத்தை வருணிக்கின்றன. எனினும் இவ்வசனங்கள் குருத்துவத்தின் முக்கிய, பொதுவான அம்சங்களைக் கொண்டுள்ளனவென்பதை மறுக்க முடியாது. உதாரணமாக, குரு மனுப்பேசுகிறவராயிருக்க வேண்டுமென்பதையும், குருத்துவ

அலுவலில் உட்புக தேவ அழைத்தல் தேவையென்பதையும், பலி செலுத்துவது குருத்துவத்தின் முதல் அலுவல் என்பதையும் அர்ச்.சின்னப்பர் கொடுத்துள்ள வியாக்கியானம் விளக்கிக் காண்பிக்கின்றது.

மனிதன் தான்தானே தேவனுக்கு ஆராதனை செலுத்துவதோடு திருப்தியடையவில்லை. தன்னைவிட அதிக அருகதையுள்ளவர்கள் தன் சார்பாகக் கடவுளுக்கு ஆராதனை சமர்ப்பிக்க வேண்டுமென்ற விருப்பம் மனித உள்ளத்தில் இருக்கின்றது. மேலும் மனிதன் தனியே சீவிக்காமல் சமுதாயத்தோடு சேர்ந்து சீவிக்கிறான். சமுதாயமும் கடவுளை வழிபட வேண்டும். சமுதாயத்தின் சார்பாக தேவனுக்கு ஆராதனை செலுத்த பொது ஆள் ஒருவன் தகுதியுள்ளவன், தெரிந்தெடுக்கப்படுகிறான். சமுதாயம் வளர்ந்து பலுகியபின் ஒரு வம்சமே குருத்துவ அலுவலுக்காக ஒதுக்கி வைக்கப்படுகிறது.

குரு மக்களின் பிரதிநிதியாக கடவுள்முன் நின்று ஆராதனை செலுத்துபவர். ஆனால், கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே பாவதோஷத்தால் பிளவு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிளவை இணைப்பது குருவின் முதற் கடமையாகும்.

ஆரோனின் பாவப்பரிகாரப் பலி கர்த்தருக்குப் பிரியமாயில்லை. ஆதலால் தேவ குமாரன் மனிதனாய்த் தோன்றினார். மனுக்குலத்துக்காக மனுப்பேசுகிறவர் மனுக்குலத்தைச் சார்ந்தவராயிருக்க வேண்டும்.

“பரிசுத்தமாக்குகிறவரும், பரிசுத்தமாக்கப்படுகிறவர்களுமாகிய எல்லோரும் ஒருவரிடத்திலிருந்தே வருகிறார்கள். இது காரணத்தின் நிமித்தம் அவர்களைச் சகோதரர் என்றழைக்க அவர் கூச்சப்படாமல்…

பிள்ளைகள் மாம்சமும் இரத்தமுமுடையவர்களாயிருப்பதால், அவரும் அவர்களைப் போலவே மாம்சத்துக்கும் இரத்தத்துக்கும் பங்காளியானார். ஆதலால், அவர் இரக்கமுள்ளவரும் சர்வேசுரன் மட்டில் பிரமாணிக்கமான குரப்பிரசாதியுமாயிருந்து, ஜனங்களுடைய பாவங்களைப் பரிகரிக்கும்படிக்கு சகலத்திலும் தம்முடைய சகோதரர்களுக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது.” ( எபி.2.11-17)

தம்முடைய ஏக குமாரனைப் பலியாக்கி மனுக்குலத்தை மீட்க வேண்டுமென்று சர்வேசுரன் நிச்சயித்தபோது, மக்களை தமது சகோதரர் என்று

அழைக்கும் ஸ்தானத்தில் அவர் வர வேண்டியதும் அவசியமாயிற்று. பரிசுத்தமாக்குகிறவரும் பரிசுத்தமாக்கப் படுகிறவர்களும் ஒரே தரப்பினராயிருத்தல் வேண்டும். தேவன் மனிதனானதன் அடிப்படை இதுவே.

பாவதோஷம் நிறைந்த மக்களுக்காக ஏற்பட்ட உண்மைக் குரு அவர்களுடைய துன்பத்திலும், மரணத்திலும் பங்குகொள்ள வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் இயல்பே.

“தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் படைத்தவர் அநேகம் புத்திரரை மகிமைக்கு அழைத்திருந்ததினாலே, அவர்களுடைய இரட்சண்யத்திற்கு காரணமானவரைப் பாடுகளால் பூரணமாக்குவது அவருக்குத் தகுதியாயிருந்தது. (எபி.2:10)

மக்களைக் கர்த்தரிடம் அழைத்துச் செல்ல வேண்டியவர் குருவானவர். கர்த்தர் அசுத்தமாதெதுவையும் கண்ணோக்கமாட்டார். ஆதலின் குரு முதன்முதலில் பரிசுத்தராயிருக்க வேண்டும். பாவங்களுக்கு பரிகாரம் செய்வதும் அவருடைய கடமையாகும்.

“பரிசுத்தரும், மாசில்லாதவரும், அமலரும், பாவிகளினின்று பிரிக்கப்பட்டவரும் பரமண்டலங்களுக்கு மேலாக உயர்ந்தவருமாகிய இவ்வித பிரதான குருப்பிரசாதி நமக்கு உண்டாயிருப்பது தகுதியாமே.” (எபி.7:26)

இயல் வேதத்தில், ஜனங்களே தகுதியுள்ள ஒருவனை தங்கள் பெயரால் கடவுளுக்குப் பலிசெலுத்த நியமிப்பது வழக்கம். அவ்விதம் நியமிக்கப்பட்டவன் கடவுளால் அங்கீகரிக்கப்படலாம்.

அருள் வேதத்தில் ஆராதனை முறை அல்லது பலி கடவுளாலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை நிறைவேற்றுகிறவர்கள் சர்வேசுரனின் அழைத்தலின்மேல் பலியை நிறைவேற்ற முடியும். தேவ அழைத்தலின்றி கை வைக்கிறவர்கள் அக்கிரமிகள்.

“கிறீஸ்துநாதரும் குருப்பிரசாதியாகும்படி தம்மைத் தாமே உயர்த்தவில்லை. ஆனால், நீர் என்னுடைய குமாரன். இன்று நான் உம்மை

ஜெனிப்பித்தேன் என்று அவரை நோக்கிச் சொன்னவரே அவரை உயர்த்தினார்." (எபி.5:5)

கிறீஸ்துநாதர், மனித சுபாவம் எடுத்த நிமிடத்தில் குருவாக, அபிஷேகம் பெற்றார். அதாவது, அதே நிமிடத்தில் மனிதனுக்காக சர்வேசுரனிடம் மனுப்பேசுகிறவரானார்.

"நீர் மெல்கிசதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் குருப்பிரசாதியாயிருக்கிறீர்." (எபி.5.5-10) (சங்.109:4)

ஆரோன் பிரதான குரு என்ற நிலைமை மாறினது. ஆட்கள் மாறினதுமட்டுமல்ல, ஆராதனை முறையும் மாற்றப்பட்டது. ஆரோன் பலி செலுத்தின விதம் மாறி, மெல்கிசதேக் முறைப்பிரகாரம் பலி செலுத்தப்பட வேண்டுமென்றாயிற்று.

மெல்கிசதேக் என்ற பதம் நீதியின் அரசன் எனப்பொருள்படும். மெல்கிசதேக் என்ற இடத்தின் அரசன். சாலோம் என்ற பதம் சமாதானம் என்ற அர்த்தத்தைக் கொண்டது. எனவே அவர் சமாதானத்தின் அரசன் என்றும் அழைக்கப்படுவார். மெல்கிசதேக் குருவும் அரசனுமாய் இருந்தவர் அவர்.

"இராஜாக்களை சங்கரித்துத் திரும்பி வந்த அபிரகாமுக்கு எதிர்கொண்டுபோய் அவரை ஆசீர்வதித்தார்.

"ஆபிரகாமோ, இவருக்குத் தம்முடைய சகல பொருட்களிலும் பத்திலோர் பாகத்தைப் பகிர்ந்தார்." (எபி.7:1-2)

மெல்கிசதேக் ஆபிரகாமை ஆசீர்வதித்ததும், ஆபிரகாம் தம் உடைமைகளில் பத்திலொன்றை அன்பளிப்பாகக் கொடுத்ததும் மெல்கிசதேக் உயர்ந்த ஸ்தானத்திலுள்ளவர் என்பதை அபிரகாம் ஏற்றுக்கொண்டார் எனக்காட்டுகிறது. எனவே கிறீஸ்துநாதருடைய குருத்துவம், லேவியருடைய குருத்துவத்தைவிட உயர்ந்ததெனப் புலனாகிறது. இதைப் பற்றி ஏழாம் அதிகாரத்தில் மிகவும் விரிவாக சின்னப்பர் எழுதுகிறார்.

மெல்கிசதேக்கின் பிறப்பைப் பற்றிய விபரங்கள் வேதாகமத்தில் கொடுக்கப்படவில்லை. அவருடைய பெற்றோர்கள் பெயர்களும் நமக்குத்

தெரியாது. பழைய ஏற்பாட்டில் குருத்துவ அலுவலில் ஈடுபட்டவர்கள் லேவியர்கள். ஒரே வம்சத்தைச் சேர்ந்தவர்களாயிருக்க வேண்டும். ஏனைய வம்சத்தவர்கள் தேவாலயப் பணிவிடைகளில் கலந்துகொள்ளக் கூடாது. மெல்கிசதேக்கும் ஒரு குருவானவர். பலி செலுத்தி வந்தார். இவருடைய வம்ச வழியே தெரியமாலிருந்தது. வம்சவழிக்கு விலக்காக இருந்தார். அது புதிய ஏற்பாட்டின் குருத்துவத்திற்கு அடையாளமாயிருந்தது. வம்ச வழியாகக் குருத்துவத் தொண்டில் ஈடுபடும் வழக்கம் புதிய ஏற்பாட்டில் மறைந்தது.

இவர் மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய பிரமாணத்தின்படி குருவாகமால், அழியாத சீவியத்துக்குரிய வல்லமையின்படி குருப்பிரசாதியானார்.

ஏனெனில் நீர் மெல்கிசதேக்கின் முறைப்படி எந்நாளும் குருப்பிரசாதியாயிருக்கிறீர் என்று சத்தியமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. (எபி.7:16-17)